தமிழ்நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1973 நவம்பர் 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *299, 300, 301, 302* ஆகிய எண்களுள்ள வினாக்கள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Cancer Units in District Hospitals

* 303 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI
THIRU N. K. PALANISAMY
Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that there are cancer units in each of the District Headquarters Hospitals; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழாது.

தருமபுரி மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம்

* *304* **வினா—திரு. எம். சுரேந்திரன்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் . இல்லை.